மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) & (உ) சென்னை கீழ்ப்பாக்கத்திலுள்ள பால விஹார் என்ற மன ஊனமுற்ற பிள்ளைகளின் பள்ளிக்கு முழு மான்யம் பெறும் மற்ற பள்ளிகளைப்போல் முழு போதனை மான்யமும் மற்றும் பராமரிப்பு மான்யமும் அளிக்கப்படும்.

திரு. என். கே. பழனிசாமி : சார், இந்த மாதிரி இன்னும் கோயம் புத்தூரிலும், சேலத்திலும் தனி நிறுவனங்கள் ஏற்படுத்துவதற்கு சர்க்கார் ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: அதைப்பற்றி குறிப்பு இல்லை தனிக்கேள்வி போடவும்.

மீன்பிடிப் படகுகள்.

* 398 வினா—திருமதி த. ந. அனந்தநாயகி : மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) மத்திய அரசு சோவியத் நாடுடன் ஆழ்கடலில் மீன் பிடிக்கக் கூடிய சிறந்த வசதி கொண்ட விசைப்படகுகளை வாங்குவதற்கு ஒரு ஒப்பந்தம் செய்திருக்கிறதா ?

(இ) அந்த ஒப்பந்தத்தின் கீழ் தமிழ்நாட்டுக்குக் கிடைத்த விசைப் படகுகள் எத்தனை ?

(உ) அவற்றை விநியோகம் செய்ய அனுசரித்த முறை என்ன ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: (அ) (இ) & (உ) ஆழ்கடலிலும், உள்நாட்டிலும்கூட்டுறவு முறையில் மீன் பிடிப்பதற்கான ஒப்பந்தம் ஒன்றைச் செய்து கொள்ள ருஷிய நாட்டுடன் பேச முயற்சி எடுத்து வருவதாக இந்திய அரசு தெரிவித்துள்ளது. இந்திய அரசின் வேளாண்மை அமைச்சகத்துடன் ருஷிய நாட்டு வாணிகக் குழு ஆலோசனை நடத்தியது. ஆழ்கடல் மீன்பிடி படகுகளை உள்நாட்டிலேயே கட்டுவதற்கான திறனை முழு அளவு பயன்படுத்துவதென்றும் எஞ்சிய தேவைகளை உத்தேச ஒப்பந்தத்தின்கீழ், ருஷியாவிலிருந்து அப்படகுகளை இறக்குமதி செய்து கொள்வதன் மூலம் சரிக்கட்டுவதென்றும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

ரஷ்ய நாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்படும் சில குறிப்பீடுகளைக் கொண்ட படகுகளைப் பயன்படுத்துவதற்கான சாத்தியக் கூறினை ஆய்வு செய்யலாம் என்றும், அத்தகைய படகுகளின் தேவை எவ்வளவு என்பதைத் தங்களுக்குத் தெரிவிக்கலாம் என்றும் அப்போதுதான் ரஷ்ய அதிகாரிகளுடன் மேற்கொண்டு பேச்சு நடத்தும்போது அந்தப் படகுகளின் தேவை பரிசீலனையில் எடுத்துக் கொள்ளப்படலாம் என்றும் இந்திய அரசு இந்த அரசைக் கேட்டுக் கொண்டுள்ளது.

1974 மார்ச் 13]

மாநில அரசு இக்கருத்து குறித்து பரிசீலனை செய்து, நிதி இடர்ப்பாடு காரணமாக, தற்சமயம் படகுகள் தேவையினை முன் வைக்கும் செயற் குறிப்பைத் தள்ளி வைத்துள்ளது.

திரு. வா. மை. அப்துல் ஜப்பார் : தலைவர் அவர்களே, இந்த ருஷிய நாட்டிலிருந்து படகுகள் வந்துசேருவதைத்தவிர நம்மிடம் ஏதேனும் ஆழ்கடலில் மீன்பிடிக்கக்கூடிய முறையிலே அமைந்துள்ள படகுகள் உண்டா ? ஆழ்கடலில் மீன் பிடிப்பதற்கு இப்பொழுது என்ன நடவடிக்கைகளை அரசு செய்திருக்கிறது என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : நம்மிடம் இப்பொழுது கைவசம் இரண்டு டிராலர்ஸ் இருக்கின்றன, மேலும் இரண்டு டிராலர்ஸ் கட்டிமுடிக்கப்படக் கூடிய நிலைமையில் இருக்கின்றன. இருக் கின்ற இரண்டு டிராலர்களை வைத்துக்கொண்டு நாம் ஆய்வையும் மீன் பிடித்தலையும் நடத்தி வருகிறோம்.

திரு. பெ. சௌந்தர பாண்டியன் : தலைவர் அவர்களே, ஒவ்வொரு ஆண்டும் ருஷ்ய நாட்டிலிருந்து எவ்வளவு படகுகள் வாங்கவேண்டு மென்று திட்டமிடப்பட்டிருக்கிறது ? அரசாங்கமும் தனியார் நிறுவனமும் அங்கிருந்து கூடுதலான அளவிற்குப் படகுகளைக் கொண்டுவருவதற்கு அரசு முயற்சிக்குமா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : மாநில அரசு, தனியார் நிறுவனங்கள் இவையெல்லாம் 20 முதல் 30 மீட்டர் நீளமுள்ள படகுகள்தான் கேட்டுள்ளார்கள். அந்த முறையிலேதான் மத்திய அரசைக் கேட்டிருக்கிறோம். ஆனால், அதற்காக 75 லட்சம் வரை செல வாகுமே என்ற காரணத்தினால் இப்பொழுது அதை மாநில அரசு ஒத்திவைத்திருக்கிறது. இப்பொழுது அப்படிப்பட்ட நிலைமை ஏற்படவில்லை.

* 399 வினா.—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மீனவர்களுக்கு மீன்பிடி விசைப்படகுகள் வழங்கப்படுவதற்கான தற் போதுள்ள முறையினை மாற்றி அமைக்கும் செயற்குறிப்பு ஏதேனும் ஆய் வில் உள்ளதா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : மீனவர்களுக்கு வழங் கப்படுவதற்காக கட்டப்பட்ட 30 அடி, 32 அடி நீளமுள்ள படகுகளில் 5 சதவீதப் படகுகள், பர்மா, ஸ்ரீலங்கா ஆகிய இடங்களிலிருந்து தாயகம் திரும்பும் அகதிகள், வேலையிழந்த பொற்கொல்லர்கள் போன்ற சிறப்பு வகையினருக்கு இது வரையில் ஒதுக்கப்பட்டு வந்தது. தங்கக் கட்டுப்பாடு நீக்கியுள்ளதையும், வேலையிழந்த பொற்கொல்லர்களுக்குத் தங்களுடைய முந்திய தொழிலில் வேலைவாய்ப்புப் பெற தடை எது மில்லாதிருப்பதையும் கருத்தில் கொண்டு, படகு ஒதுக்குவதற்கான சிறப் புப் பட்டியலிலிருந்து அவர்களின் பெயர்களை அரசு நீக்கியுள்ளது.